# சென்னைப் பெருநகர் பகுதியில் மூன்று பன்னோக்கு மையங்கள் : ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்!

## பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!...

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

**7.கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் நுழைவு வளைவுகள், உயர்கோபுர மின்விளக்குகள் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய வசதிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**8.கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் மழைநீர் வடிகால் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் மழைக் காலத்தில் தண்ணீர் தேங்கி வாகன இயக்கம் மற்றும் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருப்பதால் மழைநீர் வடிகால் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**9.கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிர்சாதன சேமிப்புக் கிடங்கு ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில், புதிய தொழில்நுட்பத்துடன், 24 மணி நேரமும் உணவுப் பொருட்களைச் சேமிப்பதற்காக குளிர்சாதன சேமிப்புக் கிடங்கு ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**10.சென்னைப் பெருநகர் பகுதியில் மூன்று பன்னோக்கு மையங்கள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

சென்னைப் பெருநகர் பகுதியில் அதிவேக இணையம், போட்டித்தேர்வுகளில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களுக்குத் தேவையான வசதிகள் மற்றும் பகிர்ந்த பணியிடங்கள் (CoWorking Space) முதலிய வசதிகளைக் கொண்ட முழுவதும் குளிரூட்டப்பட்ட மூன்று பன்னோக்கு மையங்கள் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**11. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைத்துள்ள சேத்துப்பட்டு பசுமை பூங்கா ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சென்னைப் பெருநகர் பகுதியில் அமைத்துள்ள சேத்துப்பட்டு பசுமை பூங்காவில் (Eco Park) லேசர் லைட் ஷோ, உடற்பயிற்சி மையம், சிறுவர் விளையாட்டு திடல், இசை நீருற்று, பூங்கா புனரமைத்தல் மற்றும் பொது மக்களுக்கு தேவையான வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**12. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைத்துள்ள 10 சுரங்கப்பாதைகள் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள 10 சுரங்கப்பாதைகளை நவீனமயமாக்கி, வண்ணம் பூசி மற்றும் பொது மக்கள் பயன்பாட்டிற்கு தேவையான வசதிகளுடன் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**13.சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள முக்கிய போக்குவரத்து சமிக்ஞைகள் (Traffic Signals) சூரிய சக்தியில் இயங்கும் வகையில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள முக்கிய போக்குவரத்து சமிக்ஞைகள் சூரிய சக்தியில் இயங்கும் வகையிலும், சாலை சந்திப்புகள் மக்கள் பயன்பாட்டிற்காக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**14. கொண்டித்தோப்பு மற்றும் கொளத்தூர் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் மற்றும் சேப்பாக்கத்தில் அமையவிருக்கும் இரத்த சுத்திகரிப்பு மையத்திற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

கொண்டித்தோப்பு மற்றும் கொளத்தூர் பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையங்கள் மற்றும் சேப்பாக்கத்தில் அமையவிருக்கும் இரத்த சுத்திகரிப்பு மையத்திற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கொள்முதல் செய்யப்படும்.

**15. திரு.வி.க. நகர் கொன்னூர் நெடுஞ்சாலையில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கப்படும்**

திரு.வி.க. நகர் கொன்னூர் நெடுஞ்சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் சமுதாயக்கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**16. திரு.வி.க. நகர்சந்திரயோகிசமாதிசாலையில்ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில்சமுதாயக்கூடம்அமைக்கப்படும்**

சந்திரயோகி சமாதிசாலையில் குளிர்சாதனவசதி, உணவருந்தும்பகுதிமற்றும்வாகனநிறுத்துமிடம்உள்ளிட்டவசதிகளுடன்சமுதாயக்கூடம்ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**17. ஆர். கே. நகர், இளையா தெருவில் நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டுத் திடல் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

ஆர். கே. நகர், இளையா தெருவில் 0.4 ஏக்கர் பரப்பளவில் திறந்தவெளி சிலம்பக் கூடம், பூப்பந்து அரங்கம், குத்துச் சண்டை அரங்கம் மற்றும் உயர் மின்கோபுர விளக்குகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டுத் திடல் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**18. சென்னை வில்லிவாக்கம் அகத்தியர் நகரில் அமைந்துள்ள சிறுவர் விளையாட்டுத் திடல் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சென்னை வில்லிவாக்கம் அகத்தியர் நகரில் 0.5 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சிறுவர் விளையாட்டு திடலில் சுற்றுச்சுவர் அமைத்தல், நடைபாதை அமைத்தல், இறகு பந்து உள்விளையாட்டரங்கம், கிரிக்கெட் பயிற்சி வலைமற்றும்அரங்கம் அமைத்தல் உள்ளிட்ட பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**19.பெரம்பூர் சென்ட்ரல் அவென்யூ சாலையில் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கப்படும்**

பெரம்பூர் சென்ட்ரல் அவென்யூ சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய சமுதாயக்கூடம் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**20. கொண்டித்தோப்பு வால்டாக்ஸ் சாலையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் மற்றும் விளையாட்டு திடல் அமைக்கப்படும்**

கொண்டித்தோப்பு வால்டாக்ஸ் சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய சமுதாயக்கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**21. சேத்துபட்டு அப்பாசாமி தெருவில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் கால் பந்து மைதானம் அமைக்கப்படும்.**

சேத்துபட்டு அப்பாசாமி தெருவில், அப்பகுதியில் வாழும் மக்களுக்காக சிறிய ரக கால்பந்து மைதானம் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**22. எழும்பூர் ஹாரிங்டன் சாலையில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கப்படும்**

எழும்பூர் ஹாரிங்டன் சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய சமுதாயக்கூடம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

## மெரினா கலங்கரை விளக்கம் முதல் தீவுத் திடல் வரை – ரூ.10 கோடியில் ‘மெரினா பாரம்பரிய வழித்தடம்’

**23. இராயபுரம் மூலகொத்தளத்தில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும்**

இராயபுரம் மூலகொத்தளத்தில் 0.35 ஏக்கர் பரப்பளவில் உடற்பயிற்சிக் கூடம், பூப்பந்துக் கூடம் போன்ற உட்புற மற்றும் வெளிப்புற விளையாட்டு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**24. சேப்பாக்கம் பகுதியில் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இரத்த சுத்திகரிப்பு மையம் (Dialysis centre) அமைக்கப்படும்.**

சேப்பாக்கம் பகுதியில் மக்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்க ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் இரத்த சுத்திகரிப்பு மையம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**25. சைதாப்பேட்டை அம்மா பூங்கா ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

சைதாப்பேட்டை அம்மா பூங்காவில் தற்போதுள்ள நுழைவாயிலைப் புதுப்பித்தல், கழிப்பறை வசதி அமைத்தல், செயற்கை நீரூற்று, சீரமைப்பு, விளையாட்டு உபகரணங்களை மாற்றுதல், சறுக்கு வளையம் மற்றும் நடைபாதையைப் புதுப்பித்தல், இருக்கைகள் அமைத்தல் மற்றும் யோகா மையத்தைப் புனரமைத்தல் போன்ற பணிகள் ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும்.

**26. மயிலாப்பூர் லஸ் நிழற்சாலையில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் பண்பாட்டு அரங்கம் அமைக்கப்படும்.**

மயிலாப்பூர் லஸ் நிழற்சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் பண்பாட்டு அரங்கம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**27. தியாகராய நகர் பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

தியாகராய நகர் பேருந்து நிலையம், போக்குவரத்துக்கு ஊழியர்களுக்கான ஓய்வறை, கழிப்பறை, கண்காணிப்பு கேமரா, வாகன நிறுத்தம் மற்றும் நவீன வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**28. அண்ணா நகர், எம்.எம்.டி.ஏ. காலனியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

அண்ணா நகர் எம்.எம்.டி.ஏ. காலனியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான கூடுதல் வகுப்பறை வசதிகள் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**29. கே.கே.நகரில் உள்ள சாலை சந்திப்பு மற்றும் சிவன் பூங்கா ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

கே.கே.நகரில் பி.டி.ராஜன் சாலை மற்றும் பி.டி.ராஜமன்னார் சாலை சந்திப்பை உயர்மின் கோபுர விளக்கு, செயற்கை நீரூற்று, தமிழர் பண்பாட்டை சித்தரிக்கும் சிற்பங்கள் ஆகியவற்றுடன் சீரமைத்து, பி.டி.ராஜமன்னார் சாலை சிவன் பூங்காவில் பொழுது போக்கு வசதிகளுடன் கூடிய மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**30. கோவூரில் உள்ள கோயில் குளம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

கோவூரில் உள்ள கோயில் குளத்தைப் புனரமைத்து, நடைமேடை, விளக்குகள், இருக்கை வசதிகள் மற்றும் கழிப்பிட வசதிகள் அமைத்து ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**31. ஆதம்பாக்கம் பாலகிருஷ்ணா பிரதான சாலையில் பன்னோக்கு மையம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

ஆதம்பாக்கம் பாலகிருஷ்ணா பிரதான சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் பன்னோக்கு மையம் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**32. அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

அய்யப்பன்தாங்கல் பேருந்து நிலையம், நிர்வாகக் கட்டடம், ஓட்டுநர் ஓய்வு அறைகள், உணவகம், மற்றும் வணிகக் கட்டடம் ஆகியவற்றுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**33. திருவான்மியூர் பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

திருவான்மியூர் பேருந்து நிலையம், நிர்வாகக் கட்டடம், ஓட்டுநர் ஓய்வு அறைகள், உணவகம் மற்றும் வணிகக் கட்டடம் ஆகியவற்றுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**34. வீனஸ் காலனி, சித்தாலப்பாக்கத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் நீருறிஞ்சிப் பூங்கா (Sponge Park) அமைக்கப்படும்**

வீனஸ் காலனி, சித்தாலப்பாக்கத்தில் அமைந்துள்ள 0.8 ஏக்கர் நிலபரப்பில் சுற்றுச் சுவர், நடை பாதை, குழந்தைகள் விளையாட்டு சாதனங்கள் உள்ளிட்ட வசதிகளுடன் நீருறிஞ்சிப் பூங்கா ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**35. நெமிலிச்சேரியில் அமைந்துள்ள புத்தேரி ஏரி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

நெமிலிச்சேரியில் சுமார் 7 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள புத்தேரி ஏரியில் மழைக்காலங்களில் வெள்ளநீர் எளிதாக வடிவதற்கும், உபரி நீர் சேமிப்பை அதிகரிக்கவும் பணிகள் மேற்கொள்வதுடன், நடைபாதை, இருக்கைகள், குழந்தைகள் விளையாட்டுத் தளம் மற்றும் மின் விளக்குகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**36. தாம்பரத்தில் Dr. A.P.J.அப்துல் கலாம்பூங்கா மற்றும் நல்லதண்ணீர் குளம் ரூபாய் 5 கோடிமதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தாம்பரத்தில் சுமார் 1.5 ஏக்கர் பரப்பளவுள்ள நல்லதண்ணீர் குளத்தை ஆழப்படுத்துதல், உபரி நீரை சேமித்தல் மற்றும் சுமார் 0.5 ஏக்கர் பரப்பளவுள்ள Dr. A.P.J. அப்துல்கலாம் பூங்காவில் நடைபாதை போன்ற வசதிகளுடன் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**37. திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் அமைக்கப்படும்.**

திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட நவீனவசதிகளுடன் சமுதாயக்கூடம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**38. காட்டுப்பக்கம், இந்திராநகரில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் பண்பாட்டு மையம் அமைக்கப்படும்**

காட்டுப்பக்கம், இந்திராநகரில் குளிர்சாதன வசதி, உணவருந்தும் பகுதி மற்றும் வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகளுடன் பண்பாட்டு மையம் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**39. அம்பத்தூர் பானு நகரில், நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

அம்பத்தூர் பானு நகரில், 1.8 ஏக்கர் நிலப்பரப்பில் திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், உட்புற விளையாட்டு வசதிகள், தடகளத் தடம் மற்றும் உயர் மின்கோபுர விளக்குகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**40. புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கத்தில், ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு மையம் அமைக்கப்படும்.**

புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கத்தில், உணவருந்தும் இடம் உட்பட அனைத்து வசதிகளுடன் கூடிய பன்னோக்கு மையம் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் அமைக்கப்படும்.

**41. ஆவடி பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

ஆவடி பேருந்து நிலையம், நிர்வாகக் கட்டடம், பயணியாருக்கான வசதிகள், ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான வசதிகள், உணவகம் ஆகியவற்றுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**42. பாடியநல்லூர் பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

பாடியநல்லூர் பேருந்து நிலையம், நிர்வாகக் கட்டடம், பயணியருக்கான வசதிகள், ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான வசதிகள், உணவகம் போன்ற வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**43. போரூர் கணேஷ் நகரில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு மையம் அமைக்கப்படும்.**

போரூர்கணேஷ்நகரில்அனைத்துவசதிகளுடன்கூடியபன்னோக்குமையம் ரூபாய்4 கோடிமதிப்பீட்டில்சென்னைப் பெருநகர்வளர்ச்சிக்குழுமத்தால்அமைக்கப்படும்.

**44. தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையம் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

தங்கசாலை வள்ளலார் நகர் பேருந்து நிலையம், நிர்வாகக் கட்டடம், பயணியருக்கான வசதிகள், ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கான வசதிகள், உணவகம் போன்ற நவீன வசதிகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**45. போரூர் ஏரி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

போரூர் ஏரியில், மழைக்காலங்களில் வெள்ளநீர் எளிதில் வடிவதற்கும், உபரிநீர் சேமிப்பை அதிகரிக்கவும், பணிகள் மேற்கொள்வதுடன்ஏரியின் நீர் முனை, நடைபாதை, இருக்கைகள், குழந்தைகள் விளையாட்டுத் தளம் மற்றும் விளக்குகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

**46. பெருங்குடி ஏரி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

பெருங்குடி ஏரியில், மழைக்காலங்களில் வெள்ளநீர் எளிதில் வடிவதற்கும், உபரிநீர் சேமிப்பை அதிகரிக்கவும், பணிகள் மேற்கொள்வதுடன்ஏரியின் நீர் முனை, நடைபாதை, இருக்கைகள், குழந்தைகள் விளையாட்டுத் தளம் மற்றும் விளக்குகளுடன் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேம்படுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலுரை வழங்கினார்.

---

### மதுரவாயல் தெற்குப் பகுதி 150-வது வட்டத்தில்

## கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ரத்த தான முகாம்!

### பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஜுன் 23 சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, 150-வது வட்ட கழக துணைச் செயலாளர் எஸ்.தில்லைவாணன் ஏற்பாட்டில்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வட்ட கழக அவைத் தலைவர் மு.ஆறுமுகம் தலைமையில் இன்று (23.6.24, ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணிக்கு காரம்பாக்கம் கிரேஸ் மெட்ரிக் பள்ளியில் ரத்ததான முகாம் நடைபெறவுள்ளது.

இம்முகாமினை மதுரவாயல் தெற்குப் பகுதிக் கழகச் செயலாளரும், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் ஹேமலதா கணபதி, வட்டக் கழக செயலாளர் சி.சுந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் க.கைலாசம் இரா.ராஜேந்திரன், வட்டக் கழக நிர்வாகிகள் எல். அருள், இ.ஜெயவேல், ஆர். லதா, இரா.ரமேஷ், இரா. சீனிவாசன், கே.ராமதாஸ், வி.ஜெகநாதன்.

அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் எஸ்.பாலமுருகன், மா.பா.சித்ராலயம், ஜே.ஏ. துரை, ஏ.ராகேஷ், நா.அப்துல்கபூர், அ.கவுஸ்பாஷா, ஆர்.கோவிந்தசாமி, க. நரேன்கணபதி, இ.முனுசாமி, ச.கதிரவன், ஏ.ஆனந்த், என். விவேக், வி.மணிகண்டன், சி.ராஜேஷ், எம்.செல்வதுரை, எஸ்.நித்தியானந்தம், எஸ்.சண்முகசுந்தரம்,

வட்ட செயற்குழு உறுப்பினர்கள் கே.ஜெயவேல், கே.கந்தசாமி, அ.பழனி, எல்.ஜனார்த்தனன், சு.நாகராஜன், கே.தமிழழகன், எஸ்.லட்சுமணன், ஆர். ஜெயமுருகன், வி.சுரேஷ், ஜி.கோபிநாத், எஸ்.குட்டி (எ) குருசாமி கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நல திட்ட உதவி மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட அமைப்பாளர் எம்.டி.ஆர்.சாரதிமணிமாறன் தலைமையில் நடைபெற்றது. இதில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு நலதிட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தார். இதில் தலைமைக் கழக பேச்சாளர் குடியாத்தம் புவியரசி மற்றும் எம்.எல். நாதன், வினோத் வேலாயுதம், பி.டி.சி. செல்வராஜ், பி.டி.சி. பாலு, முனைவர் ஆர்.வரதன், மூ.ராஜகாந்தம், நுங்கை வி.எஸ்.ராஜ், மு.சீனிவாசன், துபாய் விஜய், த.குணசேகர், டி.எஸ்.ராஜா, ச.அசோக்குமார், திருமலை பொன்னுரங்கம், எம்.டி.ராசன் மற்றும் தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, காணை வடக்கு ஒன்றியம் பனமலையில் தேர்தல் பணிக்குழு அலுவலகத்தை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் திறந்து வைத்தார். உடன் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். பொன்.கவுதமசிகாமணி, மாநில மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர். எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை, எம்.எஸ்.தரணிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், ப்ரியா ப.விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், காணை வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.